1993 ஏப்ரல் 7]

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இச்சங்கங்கள் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் இயங்கி வருவதால், தற்போது அந்த மூலதனக் கடனும் மானியமும் உயர்த்தி கொடுக்கப்பட்டு உள்ளதா? தொழில் உற்பத்தி இன்னும் அதிகரிக்க, அரசு மேலும் நிதி உதவி செய்ய முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பாட்டுக்கு வந்ததற்குப் பின்னால் நடைமுறை மூலதனக் கடனாக ரூபாய் 80,000, தொழிற்கூடக் கடனாக ரூபாய் 2,000 வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்தச் சங்கங்களினுடைய நிதி நிலைமையை அறிந்து, அதன் செயல் திட்டங்களுக்கு ஏற்ப, அங்கே உள்ள தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கிற நல்ல நோக்கத்தோடு, தமிழகத்தில் தொழில்கள் சிறந்து விளங்க வேண்டும், அதன்மூலம் ஏழை மக்கள் வேலை வாய்ப்பு பெற வேண்டுமென்ற நல்ல எண்ணம் கொண்ட தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் அந்தச் சங்கங்களுக்கு உரிய கடன் தொகை வழங்கப்படும்.

263——

நூலகத்துறையில் பணியிடங்களை நிரப்புதல்

*14674 — திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் நூலகத்துறை இயக்குநர், துணை இயக்குநர், உதவி இயக்குநர் பதவிகள் காலியாக இருப்பதும், பல நூலகங்களில் நூலகர் இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் நூலகர்கள் எந்த அடிப்படையில் எப்போது நியமிக்கப்படுவார்கள்.?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): இயக்குநர், துணை இயக்குநர், உதவி இயக்குநர் பதவிகள் ஏதும் காலி இல்லை. நூலகங்கள் பணியிடங்கள் அவ்வப்போது நிரப்பப்பட்டு வருகின்றன.